# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 15.10.2010 அன்று
## ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா 77, வசனங்கள் 2 முதல் 12 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள்: மென்மையாக செய்தி தெரிவிக்கும் தூதர்களை (நான்) சான்றாகக் காட்டுகிறேன்.**

**பின்னர் விரைவாகச் செல்பவர்களைச் சான்றாகக் காட்டுகிறேன். (உண்மையை) மிகச் சிறந்த முறையில் பரப்புபவர்களையும்,**

**தெளிவான வேறுபாட்டை எடுத்துக் காட்டுபவர்களையும், அறிவுரையை (வெகுதூரம்) எடுத்துச் செல்பவர்களையும் சான்றாகக் காட்டுகிறேன்.**

**மன்னிப்பதற்காகவும் எச்சரிப்பதற்காகவும், நிச்சயமாக, உங்களிடம் வாக்களிக்கப்பட்டது நிறைவேறியே தீரும்.**

**நட்சத்திரங்கள் (தம்) ஒளியை இழந்துவிடுமாறு செய்யப்படும்போதும், வானம் பிளக்கப்படும்போதும்,**

**மலைகள் பறந்து விடுமாறு செய்யப்படும்போதும், எல்லா தூதர்களும் குறிப்பிட்ட நேரத்தில் தோற்றுவிக்கப்படும்போதும்... (77 : 2 – 12)**

இந்த வசனங்களில் இறைவன், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அன்னாரின் சஹாபாக்கள் ஆகியோர் இஸ்லாத்தைப் பரப்பியதைப் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. இஸ்லாம் தனது முன்னேற்றத்தை அடைந்தவாறு பிரகாசமடைந்துள்ள அதே நிலையில் அன்னாரின் உண்மை நேசரின் காலம், அவரது வருகையின் முன்னறிவிப்பும் இதில் உள்ளது. இஸ்லாத்தின் கப்பலை பாதுகாப்பதற்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வருகை தந்து, திரும்பவும் இஸ்லாத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, இஸ்லாத்தின் தூதுச் செய்தியினை பரப்புவதன் பணியினை நிறைவேற்றி, இஸ்லாத்தில் மறைந்து போன போதனைகளை மீண்டும் உலகத்தில் நிலைநாட்டுவதே அன்னாரின் பணியாக இருந்தது. இன்னும் இவ்வசனங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் உண்மை மற்றும் அன்னாரின் ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் அடையாளங்களைக் காட்டிக் கொண்டே செல்கிறது. இந்த வசனங்களில் சில முன்னறிவிப்புகளும் உள்ளன. அந்த முன்னறிவிப்புகள் இன்று முழுமை அடைந்து வருவதை நாம் பார்க்கிறோம்; பார்த்து விட்டோம். எஞ்சியது இன்ஷா அல்லாஹ் நிறைவேறும். அதனை நாம் இன்ஷா அல்லாஹ் விரைவில் பார்ப்போம்.

இது வானம், பூமியின் அரசனாகத் திகழும் அவனின் வசனங்களாகும். அவன் அனைத்து உண்மைகளை விடவும் உண்மையாளனாக இருக்கின்றான். நமது இறைவன் ஆற்றல் உள்ளவனும் என்றென்றும் நிலைத்திருப்பவனும் ஆவான். அவன் தனது ஆற்றல் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களை உண்மைப்படுத்தினான்; இன்னும் உண்மைப்படுத்துவான். இறைவன் இன்றைய காலத்தில் ஏற்படுத்தித் தந்த அருள்களில் பங்குபெற வேண்டுமென்றால் நமது முயற்சியினை துரிதப்படுத்த வேண்டும். இதுதான் இன்று அவசியமாக இருக்கின்றது. எனவே, அல்லாஹ்வின் விதியில் நாம் பங்குபெறவேண்டுமென்றால் இவ்வுலகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் நம்மில் ஒவ்வொருவரும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகையின் குறிக்கோளில் பங்குபெற்று அன்னாருடன் இறைவன் வாக்களித்துள்ள அந்த அருள்களுக்கு வாரிசாக வேண்டும்.

இறைவன் இக்காலத்தில் தனது உதவிகளின் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பல அடையாளங்களைக் காட்டினான். இன்ஷா அல்லாஹ் இன்னும் காட்டுவான். இது சம்பந்தமாக இறைவன் கூறுகின்றான்: **மென்மையாக செய்தி தெரிவிக்கும் தூதர்களை (நான்) சான்றாகக் காட்டுகிறேன். (77:2)**

மலக்குகள் மூலமாக இறை உதவிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்திலிருந்து இறங்கத் தொடங்கியது. இந்த தூதுச் செய்தியானது நன்மை, தூய்மை, நல்லொழுக்கம், இறை அச்சத்தை பரப்புதல், அதனை நிலைநாட்டுதல் ஆகியவற்றின் தூதுச் செய்தியாக இருந்தது. இந்த அடையாளங்கள், உதவிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்கள் மூலமாகவும் பரவியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தியானது எதிரிகளின் மிக வலுவான எதிர்ப்பின் காரணமாகவும் தனது பயணத்தை தொடர்ந்தது. எதிர்ப்புகளின் சூறாவளி முன்னால் வந்து நின்றது. ஆயினும் இறைவனிடமிருந்து தொடர்ந்து கிடைத்துவந்த உதவிகள், இறை அடையாளங்களின் அந்தஸ்தைப் பெற்றிருந்த அன்னாரின் தெளிவான ஆதாரங்கள், அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களின் தப்லீக் இவை அனைத்து சிறிது சிறிதாக நல்லியல்பு கொண்டவர்களை ஜமாஅத்தில் இணையச் செய்தது. அன்னாரின் காலத்திலேயே ஜமாஅத்தின் எண்ணிக்கை இலட்சத்தை எட்டியது. ஆக, இறைவன் தனது தூதரை அனுப்பும்பொழுது அவரது தூதுச் செய்தியினை முதலில் சிறிது சிறிதாக பரப்புகிறான். பின்பு அது அதிவேகமாக பரவிக்கொண்டே செல்கிறது.

முந்தையை காலத்தில் தூதுச் செய்தியை பரப்புவதற்கான காரணிகள் மிகக் குறைவாகவே இருந்தது. பின்பு சிறிது சிறிதாக எந்த விதியினை இறைவன் நிலைநாட்ட விரும்பியிருந்தானோ அதற்கான காரணிகளை அதிகரிக்கச் செய்து விடுகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது காலத்தில் கண்ட அடையாளங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இதில் ஒரு சில அடையாளங்களை இறைவன் அன்னாருக்கு கனவு மற்றும் ஆன்மீகக் காட்சியின் மூலம் தெரிவித்துக் கொண்டு வந்தான். அன்னாரின் ஆரம்ப காலத்திலும் சரி, பிறகு அதனை தொடர்ந்து வந்த காலத்திலும் சரி அத்தகைய அடையாளங்கள் அதிகரித்துக் கொண்டே சென்றன. இதில் தனது துஆக்களும் ஜமாஅத் மக்களது துஆக்களுமே அதிகமாக இருந்தது. உதாரணமாக, தனது வாழ்நாளிலேயே அன்னார் பிளேக் நோயின் உதாரணத்தை வழங்கினார்கள். இது ஆரம்பத்தில் அன்னாரின் ஓர் அடையாளமாக வெளிப்பட்டது. அது ஒரு சாதாரண அடையாளமாகவே இருந்தது. ஒரு சில இடங்களில் அது வெளிப்பட்டது. பிறகு எந்த அளவுக்கு பரவிக் கொண்டே சென்றது என்றால் முழு இந்தியாவையும் (பிளேக் நோய்) தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

ஒரு சில முன்னறிவிப்புகள் இறை நியதியின் அடைப்படையில் நபிமார்களின் காலத்திலேயே நிறைவேறி விடுகின்றன. பிறகு எஞ்சிய முன்னறிவிப்புகளை நீங்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையான கிலாஃபத்தின் காலத்தில் நிறைவேறுவதைக் காண்பீர்கள். நாம் பார்த்து வருகிறோம். அன்னாருக்கு இறைவன், நாம் இந்த முன்னறிவிப்புகளை முழுமை அடையச் செய்வோம் என்று கூறிய ஒரு சில முன்னறிவிப்புகள் நிறைவேறுவதற்கான புதிய புதிய காரணிகளை இக்காலத்தில் உருவாக்கி இருக்கின்றான்; உருவாக்குகிறான். இது இறைவனின் நடைமுறையாக இருந்து வருகின்றது. அதாவது ஒரு சில விஷயங்களை (முன்னறிவிப்புகளை) தனது தூதரின் காலத்திலேயே நிறைவேறச் செய்து விடுகின்றான். ஒரு சில விஷயங்களை அன்னாரின் மரணத்திற்குப் பிறகு நிறைவேறச் செய்கின்றான். ஆனால் இறைத் தூதர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியானது இறை நியதியின் ஓர் அங்கமாக இருக்கின்றது. அது நிச்சயமாக முழுமையடைகிறது. இறைவன் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நோக்கி கூறியுள்ளான்:

**நாம் உம்மை (உலகிலிருந்து) எடுத்துக் கொண்டால் (மரணிக்கச் செய்தால்) அவர்களிடம் சரியான முறையில் பழிவாங்குவோம். (43:42)**

அல்லாஹ் எவர்களுக்கு பதிலடி கொடுக்க விரும்புகின்றானோ அவர்களுக்கு நிச்சயமாக பதிலடி கொடுப்பான். அது நபியின் வாழ்விலும் நிகழலாம்; அல்லது நபியின் காலத்திற்குப் பிறகும் நிகழலாம். இவ்வாறு இறைவன் எவர் சார்பாக நற்செய்தி கூற விரும்பினாலும், வெற்றியின் நற்செய்தியைக் கூற விரும்பினாலும் அதனை தனது தூதர்களின் மூலமாகவே கூறச் செய்கிறான். அதில் ஒரு சில நற்செய்திகள் அவர்களின் காலத்திலேயே நிறைவேறுகின்றன. ஒரு சில நற்செய்திகள் அவர்களின் காலத்திற்குப் பிறகு நிறைவேறுகின்றன.

உதாரணமாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களுக்கு கிஸ்ராவின் தங்க காப்பின் நற்செய்தியை வழங்கினார்கள். உண்மையில் இதில், ஈராக் இஸ்லாமிய கொடியின் கீழ் வரும் என்ற நற்செய்தி இருந்தது. இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் தான் நிறைவேறியது.

நன்மையானது இறை நியதிக்கேற்ப முதலில் சிறிது சிறிதாக பரவுகின்றது. பிறகு அதன் வட்டம் விரிவடைந்து கொண்டே செல்கிறது. இவ்வாறே நபியின் வெற்றிகளும் மெதுவாகவே முன்னேற்றம் அடைகிறது. பிறகு அதன் வட்டம் விரிவடைந்து கொண்டே செல்கிறது. அந்த வட்டம் விரிவடையும் போது அல்லாஹ்வின் நியதி முன்பை விட அதிவேகமாக உன்னத நிலைகளை அடைந்து விடுகின்றது. மேலும் இதற்கான வழிகள் திறக்கப்பட்டு அதுவும் அதிவேகத்துடன் செயல்படுகின்றன. இறைவன் ஒரு எல்லைக்குள் உள்ள ஆற்றலைக் கொண்டவன் அல்ல என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவன் நினைத்தால், நபியின் காலத்திலேயே அவர்களிடம் செய்யப்பட்ட வாக்குறுதிகள், வெற்றிகளை அவர்களின் வாழ்விலேயே நிறைவேற்றி இருப்பான். அவனால் இதனை செய்திருக்க முடியும். ஆனால் இந்த நபிமார்களுக்குப் பிறகு வரக்கூடியவர்களும் இந்த வாக்குறுதிகள் மற்றும் வெற்றிகளில் பங்கு பெற வேண்டும் என்று விரும்புகின்றான். ஆக, இக்காலத்தின் அதிவேக காரணிகள் நம்மை இதன்பக்கம் கவனமூட்டுகிறது. அதாவது இதனைக் கொண்டு நாம் சரியாக செயல்பட வேண்டும். **சஹாபாக்களின் வழியில் சென்றவாறு காலத்தின் இமாமின் உதவியாளராக மாற வேண்டும்.** அதிவேகம் படைத்த நவீன கண்டுபிடிப்புகளை இறைவனின் அருளாகப் புரிந்து கொண்டு இதனை மார்க்கத்திற்காக பயன்படுத்துங்கள். அல்லாஹ் கூறுகின்றான்:

**(தூதுச் செய்தியினை) மிகச் சிறந்த முறையில் பரப்புபவர்களையும் சான்றாகக் காட்டுகிறேன். (77:4)**

இந்த தூதுச் செய்தியை எடுத்துரைப்பதற்காகத்தான் அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அனுப்பினான். இறுதிநாள் வரை நீடித்திருக்கும் முழுமையான மார்க்கத்தையும் உருவாக்கியிருக்கின்றான். இக்காலத்தில் இம்மார்க்கத்தின் மறுமலர்ச்சிக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை அனுப்பி இருக்கிறான். ஆக, இறைவன் இக்காலத்தில் இந்த தூதுச் செய்தியை பரப்புவதற்காக புதுவகையான படைப்புகளை வழங்கியிருக்கின்றான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்களிடம் இன்று இருக்கக்கூடிய புதிய கண்டுபிடிப்புகள் இருந்ததில்லை. அவ்வாறிருந்தும் கூட அவர்கள் தப்லீகிற்கு கொடுக்க வேண்டிய உரிமைகளை முழுமையாக வழங்கி செயல்பட்டார்கள். இன்று நம்மிடம் அனைத்து வழிகளும் இருக்கின்றன. மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை அடியாரின் காலத்தில் இது நிகழவிருப்பது விதிக்கப்பட்டிருந்தது. அல்லாஹ் இதனைப் பற்றி முன்னறிவிப்பும் செய்துள்ளான். இந்த வசனத்திலும் இத்தகைய முன்னறிவிப்புதான் இருக்கின்றது. இதனை இன்னொரு வடிவத்தில் இன்னோரிடத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்: புத்தகங்கள் பரப்பப்படும்.

ஆக, இக்காலமானது புத்தகத்தினை பரப்பக் கூடிய காலமாகும். அது வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலமாகும். இவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ருஹானீ கஸாயின் என்ற பெயரில் ஒரு பொக்கிஷத்தை விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் இந்த புத்தகம் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அன்னாரின் சஹாபாக்களும் இதனை பரப்பும் வேலையில் முழுமையாக ஈடுபட்டார்கள். நாம்

சஹாபாக்களின் சம்பவங்களைப் பார்க்கிறோம். ஒரு சஹாபி மற்றொரு சஹாபிக்கு புத்தகத்தினை கொடுத்து வந்தார்கள். இவ்வாறு இவர்களின் உள்ளம் தூய்மை அடைந்தது. இவ்வாறு மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து கொண்டே சென்றார்கள். அது மட்டுமல்லாமல் அவர்கள் ஒரு தியாகத்துடன் இதனை செய்து வந்தார்கள். எவ்வாறென்றால் (இஸ்லாத்தின்) ஆரம்ப காலத்தில் சஹாபாக்கள் செய்தது போன்று இவர்களும் செய்து வந்தார்கள். இவ்வாறு இவர்கள் இறைவனுக்கு விருப்பமானவர்களாக ஆகிவிட்டார்கள். இவர்களை சாட்சியாளர்கள் என்ற முறையில் (திருக்குர்ஆனில்) கூறியிருக்கின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் தோழர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழர்களைப் போன்று செயல்படுவார்கள். இவ்வாறு இவர்களும் இறை நெருக்கத்தைப் பெற்றவர்களாக ஆகிவிட்டார்கள். இன்று இறைவன் இப்புத்தகத்தை வெளியிடுவதற்கும், எதிரிகளுக்கு பதில் கூறுவதற்கும் முன்பை விட சிறந்த வழியினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளான். முன்பு நூல்கள் சென்றடைவதில் காலதாமதம் ஆனது. ஆனால் இன்றோ இங்கு வெளியிட்ட அடுத்த நிமிடமே வேறொருவரிடம் சென்றடைந்து விடுகிறது.

இன்று, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் குர்ஆன் (விளக்கம்), இதர இஸ்லாமிய நூல்கள் இன்டர்நெட் மூலமாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் வெளிப்படுவதில் புதியதோர் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. எந்த அளவுக்கு விவேகம் இன்றைய மீடியாக்களுக்கு இருக்கின்றதோ அதனைப் பற்றி ஒரு சில காலத்திற்கு முன்னர் எந்தவொரு நினைப்பும் இருந்ததில்லை. ஆகவே இத்தகைய வாய்ப்பினை இறைவன் நமக்கு வழங்கியிருக்கின்றான். அதாவது இஸ்லாமிய தப்லீகிலும், எதிரிகளுக்கு கொடுக்கும் பதிலிலும் இதனை பயன்படுத்துங்கள். இது அல்லாஹ்வின் ஏற்பாடாக இருக்கின்றது. அவன் இவ்வாறான புதிய கண்டுபிடிப்புகளைப் படைத்து நமக்கு வழங்கி இருக்கின்றான். இது இறைவனின் அருளாகும். நமக்காக இதனை உருவாக்கி, அனைத்து வசதிகளையும் நமக்கு வழங்கியிருக்கின்றான். இப்போது இதில் நமது முயற்சி எந்த அளவு இருக்க வேண்டுமென்றால், நாம் வீணான விஷயங்களில் ஈடுபடாமலும், இந்த புதிய கண்டுபிடிப்புகளைக் கொண்டு தவறான செயல்களைச் செய்யாமலும் இதனைக் கொண்டு சரியான பயன்களைப் பெற வேண்டும். முஹம்மதிய மஸீஹின் தூதுச் செய்தியினை உலகத்தின் எல்லை வரை எட்ட வைக்கும் கூட்டத்தில் நாம் இணைந்து விட்டால் இறைவன் எந்தக் கூட்டத்தைப் பற்றி சாட்சி பகர்ந்திருக்கின்றானோ அந்தக் கூட்டத்தில் நாமும் இணைந்தவர்களாக ஆகி விடுவோம். M.T.A. நிகழ்ச்சியில் நான் அவர்களுக்கு இதனை கூறினேன். அதாவது இவ்விஷயத்திற்காக பணியாற்றும் M.T.A. உறுப்பினர்கள் அல்லது வேறு எங்கிருந்து பணியாற்றினாலும் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் தூதுச் செய்தியினை உலகின் எல்லை வரை எட்ட வைக்கும் பணியினைச் செய்து வருகின்றார்கள். இத்தகைய பணிகளை இறைவன் தான் ஏற்படுத்தி இருக்க வேண்டும். ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் இறைவன், நான் உனது பிரச்சாரத்தை பூமியின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று வாக்குறுதி அளித்துள்ளான். இதற்காகவே அல்லாஹ் இவ்வாறான புதிய கண்டுபிடிப்புகளை நம்முன் வழங்கியிருக்கின்றான். இதன் மூலமாக அன்னாரின் தூதுச் செய்தி உலகின் எல்லை வரை சென்றடைய வேண்டும் என்பதற்காக உருவாக்கி இருக்கின்றான். ஆக இது இறை நியதியாகும். இவ்வாறு அனைத்து புதிய கண்டுபிடிப்புகளும் இதற்கான சாட்சியை வழங்குகின்றது. நாம் இந்த தப்லீகில் பங்கு பெற்றவாறு அதற்கான உரிமையினை நிறைவேற்றி வந்தால் தான் நாம் அப்பணியினை சரியாக செய்து வருவதாக கருத முடியும். அப்போதுதான் இவ்வாறான உறுப்பினர்களுக்கும் உண்மையான அந்தஸ்து கிடைக்கும். இறைவனுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளை கொடுப்பதின் பக்கம் கவனம் இருந்தால்தான் இவ்வாறான பொறுப்பில் ஓர் உண்மையான உணர்வு இருக்க முடியும். Technical உதவியினாலும், கேமராவிற்கு பின்னால் இருந்து கொண்டும், நிகழ்ச்சிகளை உருவாக்கி இவ்வாறு மற்ற காரியங்களைச் செய்வது போதுமானதாகாது. மாறாக அல்லாஹ்வின் உரிமைகளை கொடுப்பதற்கு அவனை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். நமது செயல்பாடுகள் நல்ல விளைவை ஏற்படுத்துவதற்காக அவன் முன் குனிவதும் அவசியமாகும். மேலும் **(தூதுச் செய்தியினை) மிகச் சிறந்த முறையில் பரப்புபவர்களையும்**

**சான்றாகக் காட்டுகிறேன். (77:4)** என்ற வசனத்தை முன் வைத்தவாறு சஹாபாக்களின் வழியில் செல்வதன் பக்கமும் கவனம் ஏற்படும். அதாவது இபாதத்துடன் செயலில் முயற்சியினைக் காட்டும் போதுதான் இறைவனின் மஸீஹின் உதவிக்காக நமது கவனமும் செல்லும். இந்த தூதுச் செய்தியினை உலகின் எல்லை வரை எட்ட வைப்பதற்கு முயற்சியினையும் மேற்கொள்ள முடியும். (நான் சொல்ல வந்த இவ்விஷயமாவது) இந்த பொறுப்பாளர்கள் மட்டுமல்ல; இணையதளத்தில் ஆட்சேபனைகளுக்கான பதிலை தருவதற்காக அமைத்த குழு மட்டுமல்ல. மாறாக ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் இச்செயலை செய்து வர வேண்டும். எந்த உரிமையினை சஹாபாக்கள் வழங்கி வந்தார்களோ அதனை நாமும் செய்ய வேண்டும். இன்று வரை நமது நேரம் வீணாகி இருந்தாலும் சரி அல்லது கவனம் ஏற்படாமல் இருந்தாலும் சரி அல்லது இதனை உணராமலிருந்தாலும் சரி இப்போது நாம் அந்த உணர்வினைத் தட்டி எழுப்ப வேண்டும். நமது குறிக்கோளை நிறைவேற்றி இருந்தாலும் காலம் நம்மிடம் என்ன எதிர்பார்க்கின்றதென்றால், எந்த அளவுக்கு இச்செயலைச் செய்ய முன்வர முடியுமோ அதனை செய்வதில் முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு அஹ்மதியும் செயல்பட்டால் இன்ஷா அல்லாஹ் நாம் மிகப்பெரிய மாற்றத்தைக் காணக்கூடியவர்களாக இருப்போம். பிறகு அல்லாஹ் கூறுகின்றான்: **தெளிவான வேறுபாட்டை எடுத்துக் காட்டுபவர்களையும் சான்றாகக் கூறுகிறேன்.(77:5)**

இவ்வாறான தப்லீகில் புதிய கண்டுபிடிப்புகளை உபயோகிப்பது இவ்வாறான வேறுபாட்டை எடுத்துக் காட்டுகின்றது. ஒருவர் எவ்வழியில் தப்லீகில் பங்குபெறுகின்றாரோ அது இந்த வசனத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இன்டர்நெட் மூலமாகவும், Literature மூலமாகவும் அல்லது M.T.A.உறுப்பினர்கள் நேடியாக இல்லா விட்டாலும் தப்லீக் பணியில் பங்குபெற்றவர்களாகவே இருக்கின்றனர். மேலும் எவர் ஒருவர் இன்று உலகத்தில் நன்மையை ஏவி வருகின்றாரோ அவரும் இதில் பங்கு பெற்றவராகவே இருக்கின்றார். இன்று உலகம் வீண் பேச்சுகள், விளையாட்டுகளில் ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகின்றது. ஆனால் மற்றொரு பக்கம் அல்லாஹ்வின் குழுவாகவும், முஹம்மதிய மஸீஹின் குழுவாகவும் இருக்கும் இவர்கள் அல்லாஹ்வின் தூதுச் செய்தியினை உலகத்தில் பரப்புவதற்கு ஈடுபாட்டுடன் இருந்து வருகின்றார்கள். பல இஸ்லாமிய சேனல்களும் இஸ்லாமிய போதனைகளை எடுத்து வைக்க முயற்சி செய்கின்றன. ஆனால் அவை ஒரு குறிப்பிட்ட நேரம் வரை தான் அவ்வாறு ஒளிபரப்புகின்றன. பிறகு காலத்தின் நீதிபதியை கைவிட்டதன் காரணமாக அவர்கள் எவ்வாறான நிகழ்ச்சியினை ஒளிபரப்புகின்றார்கள் என்றால் அது இஸ்லாமிய போதனைகளை சீர்குலைத்து விடுகின்றது. இதில் கேள்வி பதில் நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன. ஒருவர் எனக்கு எழுதியிருக்கின்றார். அதாவது ஒரு மவ்லவி இந்நிகழ்ச்சியில் விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார். அதாவது பெண்களுக்கு பர்தா அவசியமில்லை என்று கூறுகின்றார். ஏனெனில் திருக்குர்ஆனில் நெஞ்சினை மட்டும் மறைப்பது சம்பந்தமாகவே கட்டளை இருக்கின்றது. எங்கும் தலையை மறைப்பது சம்பந்தமாக கட்டளை இல்லை. மற்ற கட்டளைகள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மனைவிகளுக்காக மட்டும் இடப்பட்ட கட்டளை. மற்றவர்களுக்காக அல்ல என்று கூறுகின்றனர்.

இதே வசனத்திலேயே நம்பிக்கை கொண்ட பெண்களைக் குறித்து கட்டளை வருகின்றது. எவ்வாறிருந்தபோதிலும், இவ்வாறு தவறான கருத்துகள் பரப்பப்படுகின்றன. மேலும் எவ்வாறு இஸ்லாமிய கட்டளைகளை மறைப்பது என்பதற்கு காரணிகளை தேடுகின்றார்கள் (பாருங்கள்). ஆக இவ்வாறான மக்கள் இறை போதனைகளின் அசல் கருத்தினை கொச்சைப்படுத்தி விடுகின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக பரவிய போதனையே உண்மையான போதனையாகும். இவர் தான் காலத்தின் நீதிபதியாக இருக்கின்றார். இப்போதனை தான் உண்மை மற்றும் பொய்; சரியானது மற்றும் தவறானது என்று வேறுபடுத்திக் காட்டி இஸ்லாத்தின் தூய வடிவத்தை வெளிப்படுத்துகின்றது. ஆக நீதிபதியாக இருந்து **தெளிவான வேறுபாட்டை எடுத்துக் காட்டுபவர்களையும் சான்றாகக் கூறுகிறேன்.(77:5)** என்ற வசனத்திற்கு விளக்கமளிப்பதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பணியாகும். ஆகவே இன்றைய உலக சூழலை அறிந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக்

கொண்டவர்களுக்காக ஏற்படுத்திய அந்த சூழ்நிலையினை தன்னுடையதாக கருதுவதே நமது கடமையாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நமக்கும் மற்றவர்களுக்கும் எந்தவித வேறுபாடும் இருக்காது. நாம் நமது தப்லீகின் மூலம் நமது நிகழ்ச்சிகள் மூலம் நமது நஃப்ஸை பரிசீலனை செய்து பார்த்தவாறு செயல்பட்டால்தான் நமக்கும் மற்றவர்களுக்கும் வேறுபாடு இருக்கும். இவர்கள் எப்போதனையைப் புரிய முன்வருகின்றார்களோ அதனை செய்வதற்கு முயற்சியும் செய்வார்கள். நல்ல முன்மாதிரியாகவும் திகழ்வார்கள். ஆகவே இஸ்லாத்தின் அழகிய போதனையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு வேறுபடுத்திக் காட்டியுள்ளார்கள். உண்மையில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்மாதிரியே ஓர் அழகிய வரைபடமாக இருக்கின்றது. இதுதான் இன்று நமக்கும் அவசியமாக இருக்கின்றது. இது சம்பந்தமாக பிரசுரம் வெளியிடுவதற்கான ஒரு திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. U.K.-விலும் உலகின் மற்ற நாடுகளிலும் இதன்படி செயல்பட்டது. உலகில் இதன் தாக்கம் மிகப் பெரியதாக இருந்தது. அதில் ஜமாஅத்தின் அறிமுகமும் கூறப்பட்டிருந்தது. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அன்பான அழகான போதனையையும் குறிப்பிடப்பட்டிருந்தது. இது உலகில் மிகப்பெரிய ஓர் தாக்கத்தினை ஏற்படுத்தியது. அமெரிக்காவிலும் இவ்வேலை நடைபெற்றது. அங்கு ஒரு காலத்தில் நாம் முன்னேற்றமடையமாட்டோம் என்று கூறி வந்தார்கள். ஆனால் இவ்வேலையை செய்யத் துவங்கும் போது பிரசுரத்தை விநியோகிகும் போது அங்குள்ள மக்கள் மகிழ்ச்சியுடன் அதனை பெற்றுக் கொண்டார்கள். மேலும் இவ்வாறான இஸ்லாமிய போதனையினை முதல்முறையாக இப்போதுதான் பார்க்கிறோம் என்று கூறினார்கள். பத்திரிகை ஆசிரியர்களும் இதனை எழுதுவதில் முன்வந்தார்கள். அவர்கள் நீங்கள் இப்போதனையை விநியோகிப்பது போல் நாங்களும் விநியோகம் செய்ய ஆசைப்படுகிறோம் என்று கூறினார்கள். இவ்வாறு இவ்வேளையில் தேசிய அளவிலான பத்திரிகை ஆசிரியர்களுள் மிகச் சிறந்த பத்திரிகை ஆசிரியர்களும் பங்குபெற்றார்கள். இவ்வாறான பத்திரிகையை இலட்சக்கணக்கான மக்கள் படித்து வருகின்றார்கள். நாம் வழங்கிய நூல்கள் ஆயிரக்கணக்கான மக்கள் வரை தான் சென்றடைந்திருக்கும். ஆனால் இவ்வாறான பத்திரிகை மூலமாக பல இலட்சம் மக்கள் வரை இப்போதனையானது சென்றடைந்தது. ஆக இவ்வழியானது மிகப்பெரிய அளவில் வெற்றிக்கு காரணமாக அமைந்தது. நான் கூறியது போன்று சிலர் இதனை மறுத்தும் வந்தார்கள். ஆனால் இப்போதனையானது நீங்கள் நினைப்பது போன்றதல்ல. மாறாக இது சகோதரத்துவம், அன்பினை உள்ளடக்கிய போதனையாகும் என்று கூறும் போது அதனை வாங்கினார்கள். ஆக இவ்வாறான வேறுபாடுதான் எங்களது போதனைகளுக்கும் மற்றவர்களின் போதனைகளுக்கும் இடையில் உள்ளது. இதனை இக்காலத்தின் இமாம் தான் எங்களுக்கு இவ்வாறு தப்லீக் செய்யுங்கள் என்று போதனை செய்தார்கள்.

ஒருவர் எனக்கு எழுதினார். அதாவது பிரசுரத்தை விநியோகம் செய்யும் போது ஒரு பெண் எங்களை மிகவும் கோபத்துடன் பார்த்தார். நீங்கள் கூறும் இப்போதனையானது வாயளவில் உள்ளதா என்று கேட்டார். இல்லை; எங்களது போதனை வேறுபட்டதாகும் என்று நாங்கள் கூறும் போது அதனை (அப்பெண்) வாங்கி புகழ்ந்தார்கள். ஆக இப்போதனையானது நன்மை, தீமையை தெளிவாக கூறிவிட்டது. அதனின் வேறுபாட்டினையும் தெளிவாக வெளிப்படுத்தி விட்டது. உண்மையான இஸ்லாம் மற்றும் சீர்குலைந்துபோன போதனைகளையும் தெளிவாக விளக்கி விட்டது. உலகத்திற்கும் இளைஞர்களுக்கும் இதன் மூலம் ஓர் தைரியம் வெளிப்பட்டது. அமெரிக்காவின் குத்தாமுல் அஹ்மதிய்யா இஜ்திமாவில் நான் கூறியதைப் போன்ற ஒரு திட்டத்தினை உருவாக்கினார்கள். அதில் அவர்கள் பத்திரிகையில் எழுதுபவர்களையும் அழைத்தார்கள். அவர்கள் இதில் கலந்து கொண்டபோது இளைஞர்கள் மத்தியில் ஓர் நம்பிக்கை உருவானது. இவ்வாறு அவர்கள் தொடர்ந்து இவ்வாறான திட்டத்தினை உருவாக்கி அதில் பங்குபெற ஆரம்பித்து விட்டார்கள். இவ்வாறு அவர்கள் மத்தியில் இருந்த தாழ்வு மனப்பான்மையும் மறைந்து விட்டது. நம்மிடம் இருக்கும் இஸ்லாமிய போதனைகளை தவறாக கேட்டு சரியானதை அறியாததே இளைஞர்களுக்கு இவ்வாறான தாழ்வு மனப்பான்மை ஏற்படுகிறது. எவ்வாறிருந்தபோதிலும் மற்றவர்களின் வாயிலிருந்து இஸ்லாமிய

போதனைகளை புகழ்வதைக் கேட்டபோது ஓர் நம்பிக்கை அவரிடத்தில் உருவானது. ஆக இது ஒரு வழிதான். இன்ஷா அல்லாஹ் இதன் மூலம் இன்னும் பல வழிகள் திறக்கும். இப்போதனையுடன் முடியப்போவதில்லை. மாறாக இவ்வாறு பல போதனைகள் அடுத்தடுத்து விநியோகிக்கப்படும். இவ்வாறு இத்தொடர் நீண்டு கொண்டே செல்லும். ஒரு நபர் வரை இந்த போதனை சென்றடைந்த பிறகு அடுத்து அவருக்கு என்ன போதனையை வழங்கலாம் என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

ஒரு நபர் என்னிடம் கூறினார். கனடாவின் பிரசுரம் விநியோகிக்கப்படுகின்றது. இந்தியாவின் ஏதேனும் ஒரு பகுதியிலிருந்து Text Message மூலம் இன்னும் பல நாடுகளுக்கு அனுப்பப்பட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கூறினார். இதில் எழும் முதல் கேள்வியானது, அங்கு எந்த திட்டம் இந்த வேலையைச் செல்லும். எந்தெந்த நாடுகளுக்கு இதனை அனுப்பும். ஒரு நாடுகளில் டைரக்டரி கிடைத்தாலும் கூட அரசாங்கம் இதற்கு தடையாக வந்து நிற்கும். அது மட்டுமல்லாமல் எவரொருவர் இந்த தூதுச் செய்தியினை பெற முன்வருவதில்லையோ அவர்களுக்கு அனுப்புவதும் பொதுவாக தவறான செயலாகி விடும். இந்தவகை வழிமுறை நாம் நேரடியாக செய்யும் போது ஏற்படுத்தும் தாக்கத்தை ஏற்படுத்தாது. நீங்கள் நேரடியாக (பிரசுரம்) கொடுக்கும் போது ஒன்று இதில் தமது முயற்சியும் கலந்திருக்கின்றது. ஓர் தனிப்பட்ட தொடர்பும் ஏற்படும். பிறகு கொடுக்கப்பட்ட நபர் உங்களைப் பார்க்கும் போது உங்களின் உருவத்தை பார்க்கின்றார். உங்களின் அணுகுமுறையை கவனிக்கின்றார். உங்களது பேச்சுக்களையும் கவனிக்கின்றார். இதன் மூலம் அவர் வெளிப்படையான தோற்றத்தைக் கொண்டு நீங்கள் எவ்வாறானவர் என்பதை யூகித்து விடுகின்றார். அவர்களிடம் பழகும் போது அவரிடம் தொடர்பு அதிகரிக்கின்றது. இவ்வாறு இது உங்களுக்கு ஒரு தப்லீகிற்கான வழியை உருவாக்கி விடுகின்றது. நூல்கள், பிரசுரங்கள் கொடுப்பது சரியானது. ஆனால் தொலைபேசி மூலமாவோ, Test message மூலமாகவோ கொடுப்பது அந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தாது. எதுவரை தனது சொந்த முயற்சியினால் தப்லீக் செய்யப்படுவதில்லையோ, அல்லது நூல்கள் கொடுப்பதில்லையோ அதுவரை சரியான பலனைப் பெற முடியாது. எனது பார்வையில் இவ்வாறான Text message கம்பெனி மூலம் கொடுக்க முடியும். இவ்வாறு தப்லீக் செய்வது சாத்தியமல்ல. ஏனென்றால் எந்த அளவுக்கு தொடர்பு நேரடியாக இருக்குமோ அந்த அளவுக்கு தப்லீகில் முன்னேறுவோம். பிறகு நான் உங்களிடம் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால் பாகிஸ்தான் மற்றும் இதர நாடுகளில் குறிப்பாக முஸ்லிம் நாடுகளில் தடைகள் இருந்தாலும் எந்த நாடுகளில் சுதந்திரம் இருக்கின்றதோ அவர்கள் அங்கு மிகவும் பரவலாக ஜமாஅத்தினை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொரு நாடுகளிலும் ஆயிரக்கணக்கில் இதனை வெளியிட்டாலும், இது போதும் என்று கருதி விடாமல் இதனை மேலும் அதிகரிக்கச் செய்ய வேண்டும். ஒவ்வொரு வருடமும் இவ்வாறான அறிமுகமானது இலட்சக்கணக்கை அடைய வேண்டும். எவர்கள் வரை இது சென்றடைந்து விடுகின்றதோ அவர்களுக்கு அடுத்த பகுதியினை கொடுக்க வேண்டும். ஆக இதில் அனைத்து அமைப்புகளும் தன்னை உட்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு நான் கூறியது போன்று இந்த பிரசுரம் மூலமாக அமெரிக்காவில் மட்டுமல்ல. மற்ற நாடுகளிலும் பத்திரிகையாளர்கள் செய்திகளை வெளியிட்டுள்ளார்கள். இவ்வாறு அங்கு பல மில்லியன் அளவிலான மக்கள் வரை அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனை சென்றடைந்துள்ளது. ஆக இவ்வேலையினை முன்பை விட அதிகமாக செய்வது அவசியமாகும். எச்சரிப்பதும் நபிமார்களின் பணிகளில் ஒரு பணியாகவும் இருக்கின்றது. இறைவன் கூறுகின்றான்: நபிமார்களை ஏற்று நடப்பவர்களும் அவர்களின் சமுதாயத்தை முன்னேற்றும் பணியில் ஈடுபட வேண்டும்.

இது சம்பந்தமாக இறைவன் கூறுகின்றான்: **அறிவுரையை (வெகுதூரம்) எடுத்துச் செல்பவர்களையும் சான்றாகக் காட்டுகிறேன். (77:6)** அதாவது அல்லாஹ் தூதுச் செய்தியினை எடுத்துச் செல்பவர்களுக்கு எச்சரிப்பவர்கள் வட்டத்தில் உள்ளடங்குவது நபிமார்கள், உண்மையாக கீழ்படிபவர்களின் பணியாகும். ஆக ஒரு தூதுச் செய்திக்குப் பிறகு மற்றொரு தூதுச் செய்தியை எடுத்து வைப்பதும் நபிமார்களை

உண்மையாக கீழ்படிபவர்களின் பணியாகும். ஏனென்றால் இதன் மூலம் தவறான வழியில் சென்று கொண்டிருக்கும் இவ்வுலகம் அதிலிருந்து இரட்சிப்பு பெற வேண்டும். இதுதான் இறை ஜமாஅத்தின் பணியாகும். அதாவது உலகத்தை நெருப்புக் கிடங்கில் விழுவதிலிருந்து பாதுகாக்க வேண்டும். இதற்காக எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். தூதுச் செய்தியைப் பொருத்தவரையில் இறைவன் இதனை இரு பகுதிகளாக பிரித்துள்ளான். அதாவது **மன்னிப்பதற்காகவும் எச்சரிப்பதற்காகவும் (77:7)** அதாவது ஆதாரம் மற்றும் வாதத்தின் அடிப்படையில், எச்சரிக்கையின் அடிப்படையில் என்பதாகும். ஆக ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் இறை பிடியும் வரக்கூடும். இந்த வசனம், இதற்கு முன்னுள்ள வசனத்தைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

அதாவது நபியின் அடையாளம் முஃமின் மற்றும் காஃபிர்கள் இடையேயான வேறுபாட்டினை காட்டி விடுகின்றது. இந்த இமாமை ஏற்பதிலா அல்லது எதிர்ப்பதிலா என்பதும் புரிந்து விடும். இதனை புரிந்து கொள்வது சிலருக்க ஆதாரமாக திகமும். உத்ரா அதாவது மரணித்தவாறு அவர்களது உள்ளம் நாங்கள் தவறான வழியில் இருந்தோம் என்பதை ஏற்றுக் கொள்கின்றது. சிலரைப் பொருத்தவரை அது எச்சரிப்பதற்கு காரணமாக அமையும். அவர்கள் தவ்பா செய்து தீமையைச் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஆக சிலரின் மனதில் நபிமார்களின் உண்மை பதிந்து விடுகின்றது. ஆனால் இழிவுபடுத்துதல், அகங்காரம் மற்றும் தற்பெருமை கொள்வதும் சில நேரம் முன்னால் வந்து விடுகிறது. அதாவது நான் ஏன் ஏற்கவில்லை என்று சிலர் இறை சன்னிதானத்தில் கணக்கினை கொடுப்பார்கள். சிலருக்கு தவ்பா செய்வதற்கு தவ்ஃபீக் கிடைத்து விடும். கிடைத்தும் விடுகின்றது. ஆனால் சில நேரம் அல்லாஹ் எவர் தவ்பா செய்வதில்லையோ தனது நிலையினை மாற்றுவதில்லையோ அவர்களுக்கு எச்சரிக்கை செய்தவாறு இவர்களின் முடிவினைப் பற்றி திருக்குர்ஆனில் கணிசமான இடங்களில் கூறியுள்ளான்.

இதனை சுட்டிக் காட்டியவாறு இறைவன் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான். நீங்கள் **நிச்சயமாக, உங்களிடம் வாக்களிக்கப்பட்டது நிறைவேறியே தீரும் (77:8)** அதாவது இந்த எச்சரிக்கையை நீங்கள் ஏற்கவில்லையென்றால் அதனை இறைவன் இவ்வுலகிலும் வெளிப்படுத்துவான்; அதன் முடிவை மறுமையின் தண்டனைக்கான செய்தியினையும் தருகிறான். மேலும் நபிமார்கள் அவனை ஏற்பவர்களுக்கு இதில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி, இறுதி முடிவு வெற்றியின் முடிவாகும் என்பதாகும். அதாவது இந்த வசனத்தில் இரண்டு தூதுச் செய்தி இருக்கின்றது. ஒன்று, நீங்கள் இறை தண்டனை மூலமாக அல்லது மரணித்த பிறகு அவனது பிடியில் வருவீர்கள். இரண்டாவது, நபிமார்கள் மற்றும் அவர்களது ஜமாஅத்துடன் வெற்றிக்கான வாக்குறுதி இதில் அடங்கியுள்ளது. இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக நிறைவேறியே தீரும். ஆக அல்லாஹ்வை ஏற்காதவர்களிடம் கூறுகின்றான். நீங்கள் அல்லாஹ்வின் சன்னிதியில் வந்து நாங்கள் அறியாமல் இருந்து விட்டோம். எங்களை மீண்டும் உலகத்திற்கு அனுப்பி விடு. நாங்கள் அந்த நபியை ஏற்றுக் கொள்வோம் என்று கூறினால் அல்லாஹ் கூறுவான். இப்போது இது நடக்காது. ஒருவர் ஒருமுறை மரணித்த பிறகு திரும்ப (உலகிற்கு) செல்ல முடியாது. இப்போது இதற்காக எதனை எச்சரிக்கையாக விடுக்கப்பட்டதோ அதுதான் கூலியாகும். ஆக எவர்கள் சிந்திக்காமல் எதிர்ப்பில் முன்னேறுகின்றார்களோ அவர்கள் அச்சப்பட வேண்டும்.

இக்காலத்தினைப் பற்றி இறைவன் கூறுகின்றான்: **நட்சத்திரங்கள் (தும்) ஒளியை இழந்துவிடுமாறு செய்யப்படும்போதும் (77:9)** அதாவது பெயர்தாங்கிய ஆலிம்கள் அறிவினை இழந்து விடுவார்கள். காலத்தின் இமாமினை ஏற்க மறுத்ததனால் தன்னைப் பின்பற்றி வருபவர்களையும் இவ்வொளியிலிருந்து பங்கு பெறாதவர்களாக ஆக்கி விடுவார்கள். துமிஸத் என்றால் அழிக்கப்படுதல் என்பதாகும். ஆக இவர்களிடம் எவ்வாறான ஒளியும் இருக்காது. ஆக ஒளியில்லாதவர் எவ்வாறு வழிநடத்த முடியும். இவர்கள் தானே வழிகேட்டில் வீழ்ந்துள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை தவறான வார்த்தைகளினால் அழைப்பதை விட இவர்களுக்கு வேறு என்ன தெரியும்? நேற்றும் இன்றும் ரப்வாவில் கத்மே நுபுவ்வத்தின் கூட்டம் நடந்து வருகிறது. இதில் அனைத்து பெரிய பெரிய உலமாக்கள் கலந்து

கொண்டார்கள். ஜமாஅத்தே இஸ்லாமியின் உலமாக்களும் மற்றும் இதர உலமாக்கள் அனைவரும் கொடுத்த அறிவிப்பின்படி கூட்டத்தில் ஜமாஅத்திற்கு எதிராக கூச்சலிடுகின்றார்கள். இதனை தவிர இவர்களிடத்தில் வேறு ஒன்றும் கிடையாது. ஆக நட்சத்திரங்கள் (தம்) ஒளியை இழந்து விடும் என்பது அரபி சொல் வழக்காக இருக்கின்றது. இதன் பொருள் என்னவென்றால், உலமாக்கள் மார்க்க அறிவு மலுங்கியவர்களாக ஆகி விடுவார்கள். அல்லது அரபு மக்கள் அவர்களிடத்தில் ஏதேனும் துன்பம் வரும் போது நட்சத்திரங்கள் தம் ஒளியினை இழந்து விட்டது என்று கூறுவதுண்டு. ஆக இதன் பொருள் என்னவென்றால் இந்த உலமாக்கள் தனது மார்க்க அறிவு மலுங்கிய நிலையில் இருளை பரப்புவதற்கு காரணிகளாக ஆகி விட்டார்கள். மேலும் மக்களை வழிகெடுத்து விட்டார்கள். இதன் முடிவாக இறைவன் தனது தூதரின் மூலமாக எச்சரிக்கை விட்டிருந்தும் இவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால் பிறகு இறை நியதி செயல்படத் தொடங்கி விடும். இயற்கை அழிவுகளும் வரும். இருள் நேரத்தில் மினுமினுத்துக் கொண்டிருக்கும் நட்சத்திரங்கள் ஒளியை இழந்து விடும். பிறகு இறைவன் கூறுகின்றான்: இக்காலம் என்னவென்றால், **வானம் பிளக்கப்படும்போதும் (77:10)** என்று கூறுகின்றான். ஒன்று இவ்வசனம் விஞ்ஞானத்தை சார்ந்ததாகவும் இருக்கின்றது. இதன் மூலம் புதிய பிரபஞ்சத்தை பற்றிய புதுப்புது விஷயங்கள் தெரிய வருகின்றது. புதுப்புது கிரகங்கள் பற்றியும் தெரிய வருகின்றது. எவ்வாறிருந்தபோதிலும் இக்காலத்தில் பலதரப்பட்ட மாற்றங்கள் ஏற்படட்டு வருகின்றன. ஆனால் ஆன்மீக உலகத்தைப் பொருத்தவரை இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையைப் பற்றி கூறப்பட்டிருக்கின்றது. ஏனென்றால் இதில் இறைவன் கூறியதைப் போன்று அதாவது நட்சத்திரங்கள் என்னும் பெயர்தாங்கிய உலமாக்களின் ஒளி மறைந்து இருள் பரவும்பொழுது அல்லாஹ் தனது நல்லடியார்களைக் கொண்டு ஒளியினை பரப்புகின்றான். பிறகு அந்த ஒளியின் மூலம் இறை நல்லடியாருக்கென ஒரு ஜமாஅத்தினை உருவாக்குகின்றான். அவர்களுக்கு இறை அருளால் உண்மையான கனவுகளும், ஆன்மீக காட்சிகளும் வெளிப்படுகின்றன. அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் இத்தகுதியினை இறைவன் வழங்குகின்றான்.

இறைவன் கூறுகின்றான்: நல்லடியார் வருவதுடன் தடைகளும் ஏற்படும் என்று நினைக்காதீர்கள். இந்த உலமாக்கள் எவ்வகையிலும் தடைகளாக முடியாது. இவர்கள் அனைவரும் இந்த ஆன்மீக ஜமாஅத்தை ஏற்றுக் கொள்வதில்தான் இரட்சிப்பு இருக்கின்றது. இந்த உலமாக்களுக்கும், இவர்களை பின்தொடர்ந்து செல்பவர்களுக்கும் எந்த தகுதியும் இல்லை. இறைவன் கூறுகின்றான்: தன்னை ஓர் பெரிய மலையாக கருதும் மக்களும், அதுமட்டுமல்லாமல் பெரிய பெரிய ஆட்சியும் இந்த நல்லடியார்களுக்கு தடைகளாக இருந்தால் அல்லாஹ்வின் நேசரின் முன்பு தடைகளாக நின்றால் அது தூள் தூளாகி விடும்.

இறைவன் கூறுகின்றான்: **மலைகள் பறந்து விடுமாறு செய்யப்படும்போதும் (77:11)** பொதுமக்களின் மத்தியில் எனது மதிப்பு வேரைப் போன்று வலுவாக இருக்கின்றது என்றோ அல்லது எனக்கு இஸ்லாத்தைப் பாதுகாக்கும் அரபு நாட்டின் அரசாட்சியின் ஒத்துழைப்பு கிடைக்கின்றது என்றோ, அல்லது மேற்கத்திய நாடுகளில் ஆட்சியின் ஒத்துழைப்பு கிடைத்திருக்கிறது என்றோ நினைத்து இருந்து விட வேண்டாம். அவர்கள் இறை நல்லடியாருக்கு எதிராக வரும்போது, அவர்களின் ஆற்றலோ, அல்லது எவருடைய பொருளுமோ உதவாது. எவரின் தப்லீகும் உதவாது. அவர்கள் தனது இடத்தில் மலையைப் போன்று உறுதியுடன் இருந்தாலும் அவர்கள் அனைவரும் (தூள் தூளாகப்) பறந்து விடுவார்கள். இது இறைவனின் முன்னறிவிப்பாகும். நாம் இறை அருளால் அவனது உதவியின் மூலம் இவ்வாறான மலைகள் பறந்து சென்றதை கண்டிருக்கிறோம். பிறகு நான் ஓதிய வசனத்தின் இறுதி வசனத்தில் கூறுகின்றான்: **எல்லா தூதர்களும் குறிப்பிட்ட நேரத்தில் தோற்றுவிக்கப்படும்போதும். (77 : 12)** ஆக, இதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டுள்ளது. எல்லா நபிமார்களை தோற்றுவிக்கப்படும் போது என்று கூறி வரக்கூடியவர் எல்லா நபிமார்களின் பிரதிநிதியாக திகழ்வார் என்று கூறியிருக்கின்றான். இவரின் வருகையினைப் பற்றி முந்தைய அனைத்து நபிமார்களும் முன்னறிவித்து இருக்கின்றார்கள். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் மூலம் நிறைவேறியது.

அல்லாஹ் அன்னாருக்கு இல்ஹாம் மூலமாக, அனைத்து நபிமார்களின் போர்வையில் அல்லாஹ்வின் மாபெரும் வீரர் என்று கூறியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்னைப் பற்றி பராஹீனே அஹ்மதிய்யாவிலும் கூறப்பட்டுள்ளது. அனைத்து நபிமார்களின் போர்வையில் அல்லாஹ்வின் பயில்வான் என்பதன் பொருள் என்னவென்றால், ஆதம் (அலை) அவர்களிலிருந்து எந்த அளவு நபிமார்கள் இறைவன் புறமிருந்து வருகை தந்திருக்கின்றார்களோ அவர்கள் இஸ்ராயீலைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி, அல்லது சாராதவராக இருந்தாலும் சரி இந்த அனைவரின் சம்பவங்களிலிருந்து ஒரு சில பகுதியினை எனக்கு இறைவன் வழங்கியிருக்கின்றான். மேலும் எனக்கு கொடுக்கப்பட்ட சம்பவங்களை பெற்றிராத எந்த நபிமார்களும் வருகை தரவில்லை. எல்லா நபிமார்களின் இயல்பின் பிரதிபலிப்பும் எனது இயல்பில் இருக்கின்றது. இது சம்பந்தமாகவே எனக்கு இறைவன் அறிவிப்பு வழங்கியிருக்கிறான். மேலும் இதில் இணையுமாறும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அனைத்து நபிமார்களின் எதிரிகளும், தற்பெருமையில் இருந்தவர்களும் பல்வேறு தண்டனைக்கு ஆளானார்கள். இக்காலத்தில் இறை தண்டனைக்கு ஆளாகுபவர்கள் அவர்களைப் போன்றவர்களாவர். எந்த தண்டனை அவர்களை அழிவுக்களாக்கியதோ அதே தண்டனை இப்போதும் வரக்கூடும். அதாவது அந்த எச்சரிக்கையானது இப்போதும் நிலைபெற்றிருக்கிறது. அவர்கள் தவ்பா செய்யவில்லையென்றால் இவர்களும் அவர்களைப் போன்றவர்களாகி விடுவார்கள். அல்லாஹ் கருணை காட்டவில்லையென்றால் இக்காலத்தின் தீயவர்கள் முந்தைய காலத்தில் தண்டனைக்கு ஆளானவர்களைப் போன்றே இருக்கின்றார்கள். அதாவது இக்காலத்தில் முந்தைய அனைத்து தண்டனைகளும் ஒன்றுசேரக் கூடும். முந்தைய காலத்து சமுதாயங்களில், சில சமுதாயம் பட்டினியாலும், சில சமுதாயம் நிலநடுக்கத்தாலும், சில சமுதாயம் வெள்ளப்பெருக்காலும், சில சமுதாயம் புயலினாலும் அழிவிற்கு ஆளானது. இதே போன்ற அழிவினை கண்டு இன்றைய கால மக்கள் அச்சம் கொள்ள வேண்டும். அவர்கள் சீர்திருந்தவில்லையென்றால் இது நிகழும். ஏனென்றால் கணிசமான மக்களிடம் தீய செயல்கள் காணப்படுகின்றன. இறை கருணை மட்டும் தான் (உங்களை) விட்டு வைத்திருக்கின்றது. இவ்வாசகத்தை மேலும் புரிவதற்கு விவரித்து கூற வேண்டியதிருக்கிறது. இறைவன் முந்தைய நபிமார்களுக்கு எவ்வாறு உதவி புரிந்தானோ அவ்வறே என்னுடனும் உதவி புரிகின்றான். உதவி புரிவான்.

ஆக, இந்த தொடர் முடியவில்லை. உதவி புரிவான் என்று கூறி இது இனியும் நடைபெறக்கூடிய செயலாகும் என்பதை தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள. உலகம் எப்பொழுதும் ஒரு சுற்றுப்பாதையில் செயல்பட்டு வருகின்றது. அதே போன்று மீண்டும் மீண்டும் முந்தைய எதிரிகளின் உதாரணங்களை கொண்டவர்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். இக்காலத்தில் காலம் சென்ற முந்தைய நபிமார்களை ஓரிடத்தில் ஒன்றுசேர்த்து அவர்களின் பிரதிநிதியாக ஒருவரை தோன்றச் செய்ய விரும்பியிருக்கின்றான். அது நான் தான் என்று கூறியிருக்கின்றார்கள். இதே போன்று இக்காலத்தில் அனைத்து தீயவர்களின் பிரதிநிதியும் தோன்றி இருக்கின்றார்கள். அது மஸீஹினை சிலுவையில் ஏற்றிய யூதர்களாக இருந்தாலும் சரி அல்லது அபூஜஹிலாக இருந்தாலும் சரி அனைவரின் உதாரணமும் இப்போது இருக்கின்றன. உதாரணமாக இறைவன் யாஜுஜ், மாஜுஜைப் பற்றி குர்ஆனில் கூறி இதன் பக்கமே கவனமூட்டியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எச்சரித்தவாறு கூறுகின்றார்கள்:**

தூங்குபவர்களே! விழுத்தெழுங்கள். சோம்பலாக இருப்பவர்களே எழுந்து விடுங்கள். மிகப்பெரிய சோதனையின் காலம் வந்து விட்டது. இந்நேரம் அழக்கூடிய நேரமே அன்றி தூங்குவதற்கல்ல. இறைவன் உங்களுக்கு அனைத்து அநீதிகளைப் பார்ப்பதற்கும் மேலும் அனைத்து அநீதிகளை அழிப்பதற்கும் இறைவனின் கருணை படைத்த அந்த ஒளியினை பார்ப்பதற்கும் கண்களை வழங்கட்டும். ஆகவே இரவின்

இறுதிப் பகுதியில் எழுந்து அழுது அழுது இறைவன் உங்களுக்கு நேர்வழியினை காட்ட வேண்டும் என்பதற்காக துஆ செய்யுங்கள். இதை விட்டு விட்டு பொய், உண்மையை அழிப்பதற்கான ஃபத்வா செய்யாதீர்கள். மேலும் இதற்காக எந்தத் திட்டத்தையும் தீட்டாதீர்கள். இறைவன் உங்களது முட்டாள்தனத்தை வெளிப்படுத்தி தனது அடியானுக்கு உதவி அளிக்கக்கூடியவனாக இருப்பான். மேலும் அவன் தனது சொந்த கரங்களில் நாட்டிய செடியை எப்பொழுதும் துண்டித்து விட மாட்டான். உங்களில் எவரேனும் இச்செடியினை துண்டித்து விட முடியுமா? இது நற்பழங்களை வெளிப்படுத்தக் கூடியது என்ற நம்பிக்கையினை தரக்கூடியதாகும். மேலும் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருப்பவனும் கருணையாளனுமாகிய அவன் ஏன் இதனை துண்டிப்பான். அதன் குறிக்கோளை அடைவதற்கு அவன் காத்திருக்கின்றான். அவன் அனைத்து மறைவானவற்றையும் அறியக் கூடியவன். அனைவரின் உள்ளம் வரை சென்றடைகின்றான். ஆகவே நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இந்த போரில் உங்களது உறுப்பில்தான் வாளை வீசுகின்றீர்கள். ஆகவே உங்கள் கையினை தீயில் இடாதீர்கள். ஏனென்றால் கொந்தளித்து உங்களது கையினை எரித்து விடும். இது மனிதனால் நியமிக்கப்பட்டது என்றால் நிச்சயமாக அழிந்து போயிருக்கும் என்பதனை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். உங்களது பார்வையில் ஒரு பொய்யர் ஒரு பொய் சொல்லி என்னிடம் பேசியிருப்பவராக கண்டிருக்கின்றீர்களா? அல்லது அவர் நிம்மதியாகத்தான் இருந்து விட்டதாக கண்டிருக்கின்றீர்களா? அந்தோ பரிதாபம்! நீங்கள் சிறிதும் சிந்திப்பதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சம்பந்தமாக இறைவன் கூறுகின்றான். நீ எவ்விஷயத்தில் நான் கூறியதாக பொய் கூறினால் உமது நாடி நரம்பினை துண்டித்து விடுவேன் என்ற கூறியிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? இவ்வாறு பொய் கூறி எந்த நபிதான் பாதுகாப்பாகவும் மதிப்புள்ளவராகவும் இருக்கின்றார். ஆகவே சகோதரர்களே! திருந்திக் கொள்ளுங்கள். இறைவன் விஷயத்தில் எல்லை மீறாதீர்கள். ஓர் புதிய மனிதனாக மாறி தக்வாவை மேற்கொள்ளுங்கள். அதன் மூலம் உங்கள் மீது கருணை காட்டப்படும். அல்லாஹ் உங்களின் பாவங்களை மன்னிக்கட்டும். ஆகவே அச்சம் கொண்டு திருந்துங்கள். நீங்கள் திருந்தவில்லையென்றால் இறைவன் கூறியது போன்று அல்லாஹ் தனது புறத்திலிருந்து தனது அடியானுக்கு உதவி புரிவான். அவனின் எதிரிகளை தூள்தூளாக்கி விடுவான். அதற்கு மாறாக நீங்கள் எதனையும் செய்ய முடியாது.

அல்லாஹ் இவ்வுலகத்திற்கு அறிவினை வழங்கட்டும். இந்த தூதுச் செய்தியைப் புரிவதற்கான தவ்ஃபீக் வழங்குவானாக. மேலும் நமக்கும் நம்மால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவு இப்போதனையினை அவர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு தவ்ஃபீக் வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON ON 15.10.2010**

Translated by : **Maulavi R. ABDULLAH**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**